ESCR Newsletter

ISSUE 13, MARCH, 2015

## ‘அம்மா வீட்டிற்கு நான் திரும்ப வரமாட்டேன்’ – வவுனியாவில் காணாமற்போதல்கள் மீதான பொது விசாரணையின் பிரதிபலிப்புகள்



**Image : Vikalpa/ CPA**

வழமைக்கு மாறான ஒரு பரபரப்பான திங்கட் கிழமை காலை, வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில், கைகளில் ஒரு அழைப்புக் கடிதத்தை ஏந்திய வண்ணம் பிரதேச செயலக அலுவலகத்திற்கு வெளியே பெண்களை அநேகம் கொண்ட ஒரு சிறிய கூட்டம் கூடிநின்றது. பலருக்கும் இந்தக் கடிதமே நம்பிக்கைக்கான ஒரு ஆதாரம். காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களாக, ஆகஸ்ட் 15, 2014 அன்று ஸ்தாபிக்கப்பட்ட காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தங்களது சாட்சியங்கள் மற்றும் வாக்கு மூலங்களை அளிப்பதற்காக அவர்கள் நின்றனர். ஜனவரி 1, 1983 இலிருந்து மே 19, 2009 இற்கு இடையிலான காலத்திலான ஏதேனும் ஆட்கடத்தல்கள் அல்லது காணாமற்போதல்கள், காணாமற் போனவர்கள் இருக்கக்கூடிய சாத்தியமான இடங்கள், சாத்தியமான குற்றமிழைத்தவர்கள், குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல், எதிர்காலத்தில் இவை மீண்டும் நிகழாதிருப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படக்கூடிய ஏதேனும் இழப்பீடுகள் அல்லது நிவாரணங்கள் என்பவற்றின் மீது ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான ஆணையுடன் ஜனாதிபதியால் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

அதன் ஆரம்பத்திலிருந்து ஆணைக்குழு 20,000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. இந்த முறைப்பாடுகள் 1983 இல் வெலிக்கடைச் சிறைக் கொலைகளின் போது காணாமற்போன ஆட்களிலிருந்து 2009 ஆம் ஆண்டில் காணாமற்போனவர்கள் வரையானதாக இருந்தது.

ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க வந்த ஒரு பெண், இன மோதல்களின் வெவ்வேறு கட்டங்களின் போது அவரது மூன்று சகோதரர்கள் எவ்வாறு காணாமற்போனார்கள் என்பது பற்றிக் கூறினார். அவரது முதலாவது சகோதரர், அவரது நாளாந்த வேலைக்காக வழமை போல சந்தைக்கு சென்றபோது, 1980 இல் காணாமற் போனார். இரண்டாவது சகோதரர், 1980 இல் குடும்பம் வவுனியாவில் இடம்பெயர்ந்து இருந்தபோது காணாமற்போனார். அவர் காணாமற் போய் ஒரு மாதத்தின் பின் அவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருப்பதாக அவர்கள் கண்டுபிடித்தனர். ஜூலை 23, 1983 அன்று அவர்களின் சகோதரரிடமிருந்து சவர்க்காரம் மற்றும் அடிப்படை குளியலறைப் பொருட்களைக் கேட்டு ஒரு கடிதத்தை அவர்கள் பெற்றனர். மூன்று நாட்களின் பின் அவரது இறப்பு வானொலியில் அறிவிக்கப்பட்டது. 52 தமிழ் சிறைக் கைதிகளின் உயிரைக் குடித்த 1983 சிறைக்கலவரத்தின் போது அவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அவர்களது சகோதரரின் உடலினைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட குடும்பத்தினர் ஒரு போதும் அனுமதிக்கப்படவில்லை. மூன்றாவது சகோதரர் 1990 இல் ஊரடங்குச் சட்டத்தின் போது இராணுவத்தினால் பிடித்துச் செல்லப்பட்டார். அவரது சகோதரரின் உடல் *மடுக்கந்த* முகாமில் இனங் காணப்பட முடியுமென அவருக்கு அறிவிக்கப்பட்ட போது, அவரைக் கண்டுபிடிப்பதற்கு தனது கணவரை அவர் அனுப்பினார். எவ்வாறாயினும், அவரது கணவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு அங்கிருந்த ஒரு பதுங்கு குழிக்குள் போடப்பட்டார். காயங்கள் கடுமையாக இருந்ததினால் அவர்கள் சிகிச்சைக்காக அவரை இந்தியாவிற்கு கூட்டிச் சென்றனர். அங்கு அவர் காயங்களின் காரணமாக இறந்ததாக் கூறினார்.

முடிவடைந்த காணாமற்போனோர் தொடர்பான ஒன்பது பகிரங்க விசாரணைகளும் வலி, துன்பம் மற்றும் தங்களது அன்புக்குரியவர்களை கண்டுபிடிப்பதற்கு குடும்பத்தவர்களின் தொடர்ச்சியான தேடுதல் என்பவற்றினால் நிரம்பியிருந்தது. வவுனியா அமர்வுகள், ஆயுதப் படைகள், த.வி.பு, துணை இராணுவக் குழுக்கள் என்பவற்றினாலான கடத்தல்கள், வெள்ளை வான் கடத்தல்கள் மற்றும் இனந்தெரியாத ஆட்களாலான கடத்தல்கள் என்பன முன்னெடுக்கப்பட்ட முறைகளை சுட்டிக்காட்டின. *சுப்பிரமணியம் ரஞ்சித்குமார்* இராணுவத்தால் பிடித்துச் செல்லப்படும் போது அவருக்கு வயது 17 மட்டுமே. அவரின் தாயாரின் கூற்றுப்படி, ஜூன் 3, 2008 அன்று, அவர் அப்பொழுது தான் கோவிலிருந்து வந்து வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். ஒரு இராணுவ கனரக (Buffel) வாகனத்தில் அவரது வீட்டிற்கு வந்த இராணுவத்தினர், மகனை வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து, வாகனத்தின் உள்ளே தள்ளி கொண்டு சென்றார்கள். அதே தினத்தன்று அவரது சகோதரரும் ஒரு buffel வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்டதாக அத் தாயார் கூறினார். இரண்டு பேரும் ஜோசப் இராணுவ முகாமிற்கு இட்டுச் செல்லப்பட்டனர். அடுத்த நாள் சகோதரர் விடுவிக்கப்பட்டார். தனது மருமகன் பற்றி அவர் கேட்ட போது, ஒரு இராணுவ அதிகாரி அவரது முகத்தை தண்ணீர் வாளி ஒன்றுக்குள் அமிழ்த்தி பையனை விடுவிக்க மாட்டோம் எனக் கூறினார். அவரது சகோதரர் வந்து, இந்த விபரங்களைக் கூறிவிட்டு, விரைவிலேயே இந்தியாவிற்கு போய்விட்டார். இராணுவத்தால் ஆட்களைக் கடத்துவதற்கு Buffel வாகனங்கள் உபயோகிக்கப்பட்டது

குறித்தான இதே போன்ற கதைகள் பலராலும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு இளம் வாலிபனான *சதாசிவம் லோகேஸ்வரன்* த.வி.பு ஆல் கூட்டிச் செல்லப்படும் போது அவருக்கு வயது 19 மட்டுமேயாகும். பெப்ரெவரி 2008 வரை அவரது தாயாரால் அவரைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அதன் பின் அவர் காணாமற் போய்விட்டார். தங்களைப் பயங்கரவாதப் புலன்விசாரணைத் திணைக்களத்திலிருந்தானவர்களாக அடையாளங் காட்டிக் கொண்ட இருவர், அவரது வீட்டுக்கு விஜயம் செய்து, புலிச் சீருடையில் இருந்த அவரது மகனின் புகைப்படம் கொண்ட ஒரு கோவையைக் காட்டிய போது அவரது நம்பிக்கைகள் மீள்துளிர்த்தன. புலிச் சீருடையில் தனது மகனின் புகைப்படத்தை எவருக்கேனும் ஒரு போதும் தான் கொடுத்ததில்லை என சாட்சியமளித்த அவரது தாயார், அது பின்னர் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கூறினார். தனது மகன் எங்கேயோ உயிருடன் இருப்பதாக தான் உறுதியாக நம்புவதாக அவர் தெரிவித்தார். த.வி.பு மேற்கொண்ட பல ஆட்கடத்தல்கள் 2002-2007 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளிலேயே நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

வெள்ளை வானால் ஆட்கள் கடத்தப்பட்டது தொடர்பான சம்பவங்களும் கூட அறிவிக்கப்பட்டன. அநேகமான வெள்ளை வான் கடத்தல்கள் கடத்தப்பட்டவரின் வீட்டுக்கு அல்லது வேலைத்தலத்திற்கு வெளியே நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது. சாட்சியமளித்த அநேகமான எல்லாருமே தங்களது காணாமற்போன உறவுகள் எங்குள்ளார்கள் என்பதை அறிவதற்கு விரும்பினார்கள். அவர்கள் இழப்பீடுகளைப் பெற்றனரா என ஆணையாளர்கள் அவர்களைக் கேட்ட போது பல பெண்கள் அழுகையால் விம்மிக் கண்ணீர் விட்டனர். ''எனக்கு ஒன்றும் வேண்டாம். எனது மகன் எனக்கு திரும்பி வர வேண்டும்'', என ஒரு பெண் கூறினார்.

ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் படி, ஆணைக்குழு ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்த நிலையில், அது பெற்றுக்கொண்ட 20,000 விண்ணப்பங்களில் 1440 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மட்டுமே பூர்த்தி செய்துள்ளது. இந்த எண்ணிக்கை ஆணைக்குழு முன்னேயுள்ள மிகப்பெரிய வேலைப் பளுவினை சுட்டிக்காட்டுகின்றதுடன், ஒரு, மூன்று உறுப்பினர் கொண்ட ஆணைக்குழு ஒவ்வொரு பகிரங்க விசாரணைகளையும் நடாத்தி 20,000 சம்பவங்களையும் சமனான முன்னுரிமையுடன் செயன்முறைப்படுத்த முடியுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

சாட்சியமளிக்கும் ஒவ்வொருவருக்கும் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு சராசரியாக எட்டிலிருந்து பதினைந்து நிமிடங்கள் வரை கொடுக்கப்படுகின்றது. காணாமற்போன நபரைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு புலன்விசாரணைக்காக உபயோகிக்கக்கூடிய ஒரு விரிவான வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு இந்த நேரம் போதுமானதா? யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது பொதுமக்களின் இறப்புகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களின் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு, ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜூலை 2014 இல் ஆணைக்குழுவின் ஆணை மேலும் விரிவாக்கப்பட்டது. ஏற்கனவே அளவுக்கதிகமான வேலைச் சுமையைக் கொண்ட ஆணைக்குழுவுக்கு, அதன் ஆணைக்கான இத்தகையதொரு விரிவாக்கம் எத்தகைய நம்பகமான விளைவை உருவாக்கும்?

இது வரை செவிமடுக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களிலிருந்தான அனைத்து தகவல்களிலுமிருந்து ஏதேனும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பது இரண்டாவது முக்கியமான கேள்வியாகும். சந்தேக நபர்கள் எவரேனும் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனரா? அப்படி, அவர்கள் இனங் காணப்பட்டிருந்தால், ஆணைக்குழுவின் முன் பகிரங்கமாக சாட்சியளிப்பதற்கு எப்பொழுது அவர்கள் அழைக்கப்படுவார்கள்? 2015 பெப்ரெவரி யில் வெளியிடப்பட வேண்டிய அதன் முதலாவது அறிக்கையை ஆணைக்குழு வெளியிடும் போது, அது கவனம் செலுத்த வேண்டிய சில கேள்விகள் இவையாகும்.

அரசாங்கத்தின் மாற்றத்தோடு, ஆணைக்குழுவின் ஆணை மதிப்பீடு செய்யப்படும் எனவும், மற்றும் அதன் செயலாற்று முறை மறுசீரமைக்கப்படுமெனவும் நம்பப்படுகிறது. எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஆணையுடனேயே ஆணைக்குழு தொடர்ந்து இயங்கிவருகிறது. மார்ச், 2015 இன் ஆரம்பத்தில் ஆணைக்குழுவின் திருகோணமலை அமர்வு நடைபெற்றபோது அவதானிக்கப்பட்டவாறு இது கடுமையான பின்விளைவுகளைக் கொண்டுள்ளது. ஆணைக் குழுவில் சாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்ட ஆட்களில் அரைவாசிக்கும் குறைவானவர்களே சாட்சியமளிப்பதற்கு வந்திருந்தனர். இலங்கை அரசாங்கத்தின் மற்றுமொரு தோல்வியடைந்த பொறிமுறை என இவ் ஆணைக்குழுவும் அடையாளப்படுத்தப்பட முன்னர் ஆணைக்குழுவின் குறைபாடுகள் மீது கவனம் செலுத்துவதற்கான ஒரு அவசர தேவை அங்கேயுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வரும் வழியில் இனந் தெரியாத ஆட்களினால் கடத்தப்படும் போது, *கணபதி தயாளகாந்தனிற்கு* வயது 27 ஆகும். இந்த சம்பவ தினத்தன்று, தனது பிரயாணம் பற்றி அவர் தொடர்ச்சியாக தனது தாயாருக்கு விபரங்களைக் கூறிய வண்ணம் வந்தார். மதவாச்சியில் மகன் இருக்கும் போது அவரிடமிருந்தான கடைசி அழைப்பை அவர் பெற்றார். அவர் குரல் தழதழத்து தேம்பியதையும் மற்றும் பின்னாலிருந்து யாரோ அச்சுறுத்தியதையும் தொலைபேசியில் தன்னால் கேட்க முடிந்ததாக அவர் கூறினார். அதுவே அவரது குரலை நான் கடைசியாகக் கேட்டது, என அவர் அழுதபடி கூறினார். அம்மா வீட்டிற்கு நான் திரும்ப வரமாட்டேன், என அவரது மகன் கூறினார்.

சுவஸ்திக்கா அருள்லிங்கம்[1]

## சுன்னாகப் பிரச்சினை: ஒரு மனித உரிமையாகத் தண்ணீர்

ரத்துபஸ்வெல ஆர்ப்பாட்டங்கள், வெலிவேரியாவின் கொந்தளிப்பான நிகழ்வுகள் மற்றும் நோய்க் காரணம் தெரியாத கடுமையான சிறுநீரக நோயினால் (CKDu) மடியும் ஆயிரக் கணக்கான விவசாயிகள், சமூகப் பொருளாதார உரிமைகள் தொடர்பான வாதங்களை முற்பக்கங்களுக்குத் தள்ளின.

[1] சட்டத்தரணி



**Image : Vikalpa/CPA**

ஒரு தொடரான சோகமான நிகழ்வுகளிடையேயான அண்மைய சம்பவம் சுன்னாகம் மின் நிலையம் தொடர்பான நீர்ப் பிரச்சினையாகும். சுன்னாகத்தில் இலங்கை மின்சார சபை வளாகத்திற்குள் இயங்கும் வட மின்வலு நிலையம் (நொதேர்ன் பவர் பிளான்ட்), கழிவு எண்ணெயை வெளியேற்றி பிரதேசத்திலுள்ள நிலத்தடி நீரூற்றுகளை மாசுபடுத்துகிறது.[2] இது அப்பிரதேசத்திலுள்ள பத்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைப் பாதித்திருப்பதாகச் சொல்லப் படுகிறது.[3] பிரதேசத்தில் குடியிருப்பவர்கள் தங்களது நாளாந்த அடிப்படைத் தேவைகளான கழுவுதல், குளித்தல் மற்றும் சமைத்தல் என்பவற்றுக்காக கழிவு எண்ணை கலந்த தண்ணீரைப் பாவிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர்.[4] மேலும், அந்தத் தண்ணீர் மனித ஆரோக்கியம் மீது மோசமான பாதிப்புகளைக் கொண்டிருப்பது மட்டுமன்றி பயிர்கள் மற்றும் தாவரங்கள் மீதும் பாதகமான தாக்கத்தைக் கொண்டுள்ள காரணத்தினால் அப் பிரதேச வாழ் மக்களின் முக்கியமான வாழ்வாதார வடிவான விவசாயத் தேவைகளுக்குக் கூட அவர்களால் இத் தண்ணீரைப் பாவிக்க முடியாதுள்ளது.[5]

மின்சார நிலையத்திலிருந்தான கழிவு எண்ணெய் தரை மேலான தாங்கிகளில் சேகரிக்கபடுவதாகவும், எவையுமே நிலத்திற்கு வெளியிடப்படுவதில்லை என்றும் மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள், அனுமதிகள் என்பன காலாண்டுப் பரிசோதனைகளுடன் வருடாந்த அடிப்படையில் முறையாக பெறப்படுவதாகவும் தெரிவித்து, வட மின்சாரக் கொம்பனி (தனியார்) நிறுவனம், யாழ்ப்பாணம், தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச்சாட்டுகளின் செல்லுபடியாகும் தன்மையை தொடர்ச்சியாக மறுத்தது.[6] பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், மின் நிலையம் தொடர்ந்தது செயற்பட்டு வருகிறது.[7] மின்சார நிலையம் தொடர்ந்து செயற்படுவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் மாசடைந்த தண்ணீரப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தத் தீர்வு வழங்கப்படல் வேண்டும் எனக் கோரினர்.[8] தண்ணீருக்கான உரிமைகள் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் சட்டவியல் நிலைப்பாடு மற்றும் அத்தகையதொரு உரிமைக்கு இலங்கை சட்ட முறைமை எந்தளவிற்கு பயனுறுதியைத் தர முடியுமென்பதன் ஒரு பகுப்பாய்வின் ஒரு மதிப்பாய்வே இந்தக் கட்டுரையாகும்.

<u>சர்வதேச சட்டத்தின் கீழ் தண்ணீருக்கான உரிமையும் அரச கடப்பாடும்</u>

சர்வதேச மனித உரிமைகள் சட்டவியலில், தண்ணீருக்கான உரிமையின் அங்கீகாரம், மனித உரிமைகளின் உட்தொடர்புத்தன்மை மற்றும் உட்தங்கியிருத்தலை எடுத்துக் கூறுகின்றது. தண்ணீருக்கான உரிமைக்கு விளக்கத்தைத் தரும் பொதுக் குறிப்பு 15, அதனை கௌரவமான மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும் மற்றும் ஏனைய மனித உரிமைகளின் பயனுறுதலுக்கான ஒரு முன்நிபந்தனையாகவும் கருதுகிறது.[9] அதற்கமைய, தண்ணீருக்கான உரிமை, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சமவாயத்தின் உறுப்புரை 11 இல் ஒரு போதுமான வாழ்க்கைத் தரத்துக்கு தேவையான ஓர் அவசியமான பகுதியாக கொள்ளப்படுகிறது.[10] எனவே தண்ணீருக்கான உரிமை, உடல்ரீதியான ஆரோக்கியத்தின் உயர்ந்த தரத்தை அனுபவிப்பதற்கான ஒவ்வொருத்தரின் உரிமையுடன் இடைத் தொடர்புபட்டுள்ளது.[11] இந்த உரிமையின் முழுமையான பயனுறுதலை அடையும் முகமாக, சுற்றாடல் மற்றும் கைத்தொழில் சுகாதாரத்தின் எல்லா அம்சங்களையும் மேம்படுத்துவதற்கும் அதேபோன்று தொழில் ரீதியான மற்றும் ஏனைய நோய்களைத் தடுப்பதற்கும், சிகிச்சையளிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.[12] மேலும், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலை நிலைமைகளுக்கான உரிமையை உள்ளடக்கும் வேலையின் நியாயமான மற்றும் சாதகமான நிலைமைகளுக்கான உரிமையின் அங்கீகாரம், சுத்தமான தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகையையும் உட்கிடையாகப் பொருள் கொள்கிறது.[13]

இந்த உரிமை மாசடைந்த தண்ணீரிலிருந்து விடுபட்டிருப்பதற்கு தனிப்பட்டவர்கள் தரப்பிலான ஒரு உரித்தை உருவாக்குவது மட்டுமன்றி,[14] தனிப்பட்ட அல்லது வீட்டுப் பாவனைக்கு தேவையான தண்ணீர் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துவதற்கும், அதாவது ஆளொருவரின் ஆரோக்கியத்தை அச்சுறுத்தும் நுண்ணங்கிகள், இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் கதிரியக்க தீங்குகள் என்பவற்றிலிருந்து விடுபட்டவை என தண்ணீர் வழங்கலின் தரத்தைக் கண்காணிப்பதற்கும் அரசுகள் மீது நேரிடையான கடப்பாடுகளையும் இடுகின்றன.[15] மேலும், ஒரு அவசர நிலைமையிலும் கூட, குடியிருப்புகளிலிருந்து ஒரு நியாயமான தூரத்தில் அமைந்ததாக, காத்திருப்பு நேரங்களைத் தவிர்ப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான நீர் பெறல்

---

2 ‘வட மின் நிலையத்தின் கழிவு எண்ணெய் பிரதேசத்தின் நீர் வழங்கலை மாசடைய வைக்கிறது’ சன்டே டைம்ஸ், ஜனவரி 18, 2015.

3 அதே ஆதாரா மூலம்

4 அதே ஆதாரா மூலம்

5 அதே ஆதாரா மூலம்

6 ‘யாழ்ப்பாண மின்வலு நிலையம் குற்றச் சாட்டுகளை நிராகரிக்கிறது’ கொழும்பு கஸெற், ஜனவரி 20, 2015.

7 ‘யாழ்ப்பாணப் பாடசாலைச் சிறுவர்கள் சுன்னாக மின்வலு நிலைய எண்ணெய்க் கசிவுக்கெதிராக ஆர்ப்பாட்டம்’ தமிழ் கார்டியன், ஜனவரி 21, 2015.

8 அதே ஆதாரா மூலம்

9 பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான ஐ.நா. குழு (CESCR), *பொதுக் குறிப்பு இல.15: தண்ணீருக்கான உரிமை (சமவாயத்தின் உறுப்புரைகள்.11 மற்றும் 12),* ஜனவரி 20, 2003, E/C.12/2002/11, பந்தி 1 இல்.

10 அதே ஆதார மூலம், பந்தி 3 இல்.

11 ஐ.நா. பொதுச் சபை, *பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்,* டிசம்பர் 16, 1966, ஐக்கிய நாடுகள், உடன்படிக்கைத் தொடர்கள், தொகுதி 993, ப.3, உறுப்புரை 12’ அதே ஆதார மூலம், பந்தி 8 இல்.

12 அதே ஆதாரமூலம்.

13 முன்னுள்ள பிற்குறிப்பு 10, உறுப்புரை 7.

14 முன்னுள்ள பிற்குறிப்பு 8, உறுப்புரை 10 இல்.

15 முன்னுள்ள பிற்குறிப்பு 8, பந்தி 12

வழிகள் உட்பட, போதுமான, பாதுகாப்பான மற்றும் கிரமமான தண்ணீர் வழங்கும் வசதிகள் அல்லது சேவைகளுக்கு பௌதிகரீதியான அணுகுவழிகளை வழங்குவதன் மூலம் குறைந்தபட்சம் அந்த உரிமையின் முக்கிய பகுதியை உறுதிப்படுத்துவதற்கு அரசு கடப்பாடு கொண்டுள்ளது.[16]

> தண்ணீருக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கான கடப்பாடு, தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட மூன்றாம் தரப்புகள் நீர் வளங்களை மாசுபடுத்துதலிருந்து தடுப்பதற்கான மேலதிக தேவைப்பாட்டினை அரசுக்கு அளிக்கின்றது.[17] சர்வதேசச் சட்டங்கள் தனியார் நிறுவனங்கள் மீது நேரடியான மனித உரிமைக் கடப்பாடுகள் தொடர்பான பிணிக்காத வழிகாட்டல்களை உருவாக்கியுள்ளன. அதற்கமைய, வியாபாரங்கள் மற்றும் மனித உரிமைகள் மீதான ஐ.நா வழிகாட்டல் கோட்பாடுகளின் படி, கூட்டிணைவு அமைப்புகள் தங்களது சம்பந்தப்பட்ட செயற்பரப்புகளினுள், அவர்களது செயற்பாடுகள் மனித உரிமை மீறல்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிய கவனத்தை உபயோகிப்பதற்கு கடப்பாடுகளைக் கொண்டுள்ளன. அவை செயற்படுமிடங்களில் எல்லாம் அத்தகைய மனித உரிமைகளை மதிக்கின்ற சமூகப் பொறுப்புடைமை பின்பற்றப்பட வேண்டும். அத்தோடு, தங்களது சொந்த மனித உரிமைகள் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அரசுகளின் ஆற்றல்களும் மற்றும் விருப்பங்களும் சுயாதீனமானவை.

ஆகையால், தங்களது நடவடிக்கைகளின் மனித உரிமைகள் தாக்கம் பற்றி தங்களுக்கு அறிவித்துக் கொள்வதற்கு ஒரு நேர்மறையான கடப்பாட்டை அவர்கள் கொண்டுள்ளனர். ‘உரிய கவன(ம்)க்’ கோட்பாடுகள் தங்களது சொந்த நடவடிக்கைகள் அல்லது அவர்களது வர்த்தக உறவுகளின் உள்ளார்ந்த இடர் தாக்க மதிப்பீட்டுச் செயன் முறையொன்றை நடத்துவதற்கு தனியார் நிறுவனங்கள் தரப்பிலான ஒரு கடப்பாட்டைத் தேவைப்படுத்துகிறது. அத்தகைய ஒரு இடர் மதிப்பீடு, உள்வாரி அல்லது வெளிவாரியான மனித உரிமைகள் நிபுணத்துவம் மீது கவனம் செலுத்துவதாக இருத்தல் வேண்டும் என்பதோடு பாதிக்கப்படும் சாத்தியம் கொண்ட குழுக்கள் மற்றும் அக்கறை கொண்டவர்களுடன் அர்த்தபுஷ்டியான கலந்தாலோசனைகளுடன் சம்பந்தப்படுதல் வேண்டும். அத்தகைய கலந்தாலோசனைச் செயன்முறைகளுக்கான கோரிக்கை, சுன்னாகம் தண்ணீர்ப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளால் உபயோகிக்கப்பட்ட சட்டச் செயன்முறைகளுக்கு முற்றிலும் முரணான நிலையிலுள்ளது.

## மனித உரிமைகள் நெறிகளின் உள்நாட்டு அமுல்படுத்தல்

தண்ணீருக்கான உரிமையை நீதி ஆய்வுக்குரிய அரசியலமைப்பு உரிமையாக[18] பாதுகாக்கும், தென்னாபிரிக்க அரசியலமைப்பு போலல்லாது, இலங்கை அரசியலமைப்பு[19] சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார உரிமைகளை அமுல்படுத்தக்கூடியவையாக அங்கீகரிக்கவில்லை. ஆகையால், மனித உரிமைகளுக்காக வாதாடுபவர்கள் இருக்கின்ற நீதிமுறைமை நடைமுறைக்கு ஏற்றவாறு, அவர்கள் முறையிடக்கூடிய நூதனமான செயன்முறையை அடையாளம் காணவும் நீதிமன்றங்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வழிகளை ஆராய்வதற்கும் தொடர்ச்சியாகத் தேவைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அத்தகையதொரு அணுகுமுறை சமூகப்- பொருளாதார உரிமைகளை ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் கட்டமைப்பிற்குள் உள்ளிணைத்தலினை அடிப்படையாகக் கொண்டது.

இந்திய அரசியலமைப்பு, அதன் அரசியலமைப்பிலான சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார உரிமைகளின்மையை வெற்றி கொள்வதற்கு இந்த கோட்பாட்டை உபயோகித்ததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் வாழ்க்கையின் மிக அத்தியாவசியங்களில் ஒன்றாக தண்ணீரை ஏற்றுக்கொள்கிறது.[20] இந்திய அரசியலமைப்பைப் போலல்லாது, இலங்கை அரசியலமைப்பு உயிர் வாழ்வதற்கான உரிமையை அங்கீகரிக்கவில்லை. எவ்வாறாயினும், சட்டவிரோத தடுத்து வைத்தலுடன் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் நீதிமன்றம், அவசியமான உட்கிடை மூலம், உயிர் வாழ்வதற்கான உரிமை தடுக்கப்படல் கூடாது என்பதனை உயிர் வாழ்வதற்கான உரிமை எனப் பொருள்கோடல் செய்தது.[21] ஓர் அலுமினியத் தொழிற்சாலையின் சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பான *சிங்கலங்கா ஸ்டான்டர்ட் கெமிக்கல்ஸ் எதிர் தலங்கம* எனும் ஒரு வழக்கில், பொதுத் தொல்லை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கருத்துரைக்கையில், அரசின் இந்த எதிர்மறையான கடப்பாட்டை ஒரு நேர்மறையான உரிமைக்கு முன்னேற்றியது. அதனால், உயிர் வாழ்வதற்கான உரிமை ஒரு கண்ணியமான சுற்றாடலுக்கான உரிமையின் எல்லைக்குள் உள்ளடக்கப்படும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது உரிமைகள் பரந்துபட்ட ரீதியாக பொருள் கொள்ளப்படல் வேண்டும் என்ற கோட்பாட்டின் கீழானதாகும் என்பதோடு அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நோக்கம் இந்த உரிமைகளைப் பயனுறுதியான வகையில் பாதுகாப்பதற்கு நீதிமன்றத்துக்கு நியாயமான வகையில் அவசியமான அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளது என்று கருதப்படல் வேண்டும். ஆகையால், இலங்கையின் நீதித்துறை கண்ணியமான சுற்றாடலின் ஒரு அம்சமாக, தண்ணீருக்கான உரிமையை அங்கீகரிப்பதற்கு இதே கோட்பாட்டினை உபயோகிக்கின்ற போக்கினைக் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது.

அரசு சட்ட ரீதியாக இயற்றிய பல கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளுக்கு மேலதிகமாக, உரிமைகள் மீது ஒரு எதிரிடையான தாக்கத்தைக் கொண்டிருக்கும் தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில், பொதுமக்களின் ஆரோக்கியத்துடன் குறுக்கீடு செய்யும்போதெல்லாம் தனியார் நிறுவனங்களின் உரிமைகள் கூட கட்டுப்படுத்தப் படக்கூடியவை, என்பதை இலங்கை நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டின. இலங்கை டுபாக்கோ நிறுவனம் சிகரெட் பக்கெற்றுகள் மீது பட எச்சரிக்கைகளை தேவைப்படுத்திய ஒரு கட்டுப்பாட்டு விதியை எதிர்த்த போது, நிறுவனத்தின் வேலைவாய்ப்பு மற்றும் கருத்துச்

---

16 அதே ஆதார மூலம், பந்தி 37

17 அதே ஆதார மூலம், பந்தி 23.

18 உறுப்புரை 27, *தென்னாபிரிக்க குடியரசின் அரசியலமைப்பு*, டிசம்பர் 10, 1996’ மாசிபுக்கோ மற்றும் ஏனையவர்கள் எதிர் ஜோகனஸ்பேர்க் நகரம் மற்றும் ஏனையவர்கள் (CCT 39/09) [2009] ZACC 28; 2010 (3) BCLR 239 (CC) ; 2010 (4) SA 1 (CC) (8 October 2009).

19 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978.

20 எயர் இந்தியா சட்டக் கூட்டுத்தாபனம் எதிர் யுனைட்டட் லேபர் யூனியன் AIR 1997 SC 645

21 சிரியானி சில்வா எதிர் இடமல்கொட, உ.நீ (அ.உ) இல.. 471/2000, S.C.M 8/8/2003

சுதந்திரத்துக்கான உரிமை, இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடப்பாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பொதுமக்களின் ஆரோக்கியத்துக்கான உரிமையை மீறிச் செல்லாது எனத் தெரிவித்து கட்டுப்பாட்டு விதியின் அமுல்படுத்தலை தாமதிப்பதற்கான டுபாக்கோ நிறுவனத்தின் வேண்டுகோளை மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுதலித்தது.[22] சர்வதேச ரீதியாக ஆரோக்கியத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உரிமையை உள்நாட்டு சட்டப் பரப்பில் நிலைநாட்டிய ஒரு காரணத்துக்காக மட்டுமன்றி பொதுமக்களின் அடிப்படை நலன்களுக்கு தனியார் நிறுவனங்களின் உரிமைகள் இரண்டாம் பட்சமானவை என்பதை ஏற்றுக்கொள்கின்றதினாலும், இந்தத் தீர்ப்பு முக்கியமானதாகின்றது.

ஒரு மனிதநேயக் கண்ணோட்டத்தில், சுன்னாகம் தண்ணீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை விரைவில் ஒரு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், மனித உரிமைகள் வழக்குரைஞர் என்ற பார்வையில், இலங்கையின் அடிப்படை உரிமைகள் சட்டவியலில் தண்ணீருக்கான உரிமையை ஸ்தாபித்துக் கொள்ளும் முகமாக நீதித்துறை வேண்டுகின்ற உந்துதலாக பாதிக்கப்பட்ட பலரினதும் அத்தகையதொரு நிலைமை அமையலாம் என்ற எதிர்பார்ப்பும் அங்கேயுள்ளது.

விசாக்கா விஜேநாயக்க[23]

## தமிழர்களின் நம்பிக்கைக்கான ஒரு பார்வை?




**Image : Vikalpa/ CPA**

ஆளுங் கூட்டணி அதிகாரத்துக்கு வந்து ஏறத்தாழ இரண்டு மாதங்களாகி விட்டன. எவ்வாறாயினும் அரசாங்கம் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் எந்த முக்கியமான பிரச்சினைகளிலும் அரிதாகவே கவனம் செலுத்தியது. வடக்கு, கிழக்கிலிருந்தான தமிழர்கள் புதிய அரசாங்கத்துக்கு நிபந்தனையற்று, அவர்களது உரிமைகள் பயனுறுத்தப்படும் மற்றும் நல்லிணக்கம் நோக்கி உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பிலேயே வாக்களித்தனர். சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் உட்பட்ட பல சம்பந்தப்பட்ட தரப்புகள் கீழே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதிலான தாமதங்கள் குறித்து தங்களது ஏமாற்றங்களை வெளிப்படுத்தினர்.

### 1. *காணிப் பிரச்சினைகள் –*

வடக்கில் பொதுமக்களுக்கு காணிகளை விடுவிப்பதற்கு ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக ஜனாதிபதியின் ஒரு பணிப்பின் பேரில் ஒரு சபை நியமிக்கப்படும் என அரசாங்கம் குறிப்பிட்ட போதிலும், இது விடயத்தில் இது வரைக்கும் ஒரு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள காணிகள் பொதுமக்களுக்கு ஒரு நீதியும் நியாயமானதுமான வகையில் விடுவிக்கப்படுமெனவும் மற்றும் பொதுமக்களால் தேவைப்படுத்தப்படும் காணிகளை விடுவிக்கும் முகமாக வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டியது அவசியமில்லை என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.[24] உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் அமைச்சரவை அனுமதியை உறுதிப்படுத்திய போதிலும், பல குடியிருப்பாளர்களும் அது ஒரு சிறிய நிலப்பரப்பே என முறையிடுவதுடன், தங்களது பாரம்பரியக் கிராமங்களில் மீளக்குடியேறுவதற்கே அவர்கள் விரும்புகின்றனர்.

### 2. *அரசியல் கைதிகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்குதல் ï*

67 ஆவது சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட 554 சிறைக் கைதிகளுள், எந்தவொரு தமிழ் அரசியல் கைதியும் உள்ளடக்கப்படாதது, நல்லிணக்கம் நோக்கி திரு.சிறிசேனவின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொண்டிருந்த தமிழ் சமூகத்திற்கு கணிசமானதொரு ஏமாற்றமாக அமைந்தது. ஒரு பொது மன்னிப்புடன் அரசியல் கைதிகளின் விடுவிப்பு நல்லிணக்கத்துக்கான வழியை ஏற்படுத்தியிருக்கும். இரகசிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட த.வி.பு இன் எண்ணிக்கையை வெளியிடுதல் மற்றும் சிவில் சமூகம், சர்வதேச பரிசோதகர்கள் அந்த புனர்வாழ்வு முகாம்களுக்கு விஜயம் செய்ய அனுமதித்தல் மற்றும் சட்டத்தரணிகளுக்கு கட்டுப்பாடற்ற அணுகுதல்களை வழங்குதல் என்பன நல்லிணக்கம் நோக்கிய அரசாங்கத்தின் விருப்பையும் மற்றும் பற்றுறுதியையும் வெளிப்படுத்தும். யாழ்ப்பாண கத்தோலிக்க மறை மாவட்டத்தின் நீதியும் மற்றும் அமைதிக்கான ஆணையகம் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களிலேயே மீள் குடியேற்றுவதற்கும் ஜனாதிபதியை வலியுறுத்தியது.[25]

### 3. *கட்டாயப்படுத்தப்பட்ட காணாமற்போதல்கள் –*

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டங்கள் என்பவற்றின் போர்க் கால மீறல்களைக் கவனத்தில் கொள்வதற்கான ஒரே பொறிமுறையான, ஜனாதிபதி ஆணைக்குழு, ஏனையவற்றோடு, இற்றை வரை பெற்றுக் கொள்ளப்பட்ட 20,000 காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது ஏதேனும் புலன்விசாரணைகள் நடைபெறுவது பற்றி எந்தவொரு குறிப்பிடுதல்களும் இதுவரை இல்லை. மாற்றுக்

---

22 சிலோன் டுபாக்கோ கொம்பனி எதிர் சுகாதார அமைச்சர் C.A. 336/2012, மேன்முறையீட்டு நீதிமன்றம் (2014).

23 சட்ட முதுமானி (மிச்சிக்கன் பல்கலைக்கழகம்), சட்டத்தரணி, சட்ட இளமானி (கொழும்பு பல்கலைக் கழகம்)

24 http://www.defence.lk/new.asp?fname=Govt_to_appoint_committee_to_inquire_land_issue_in_North_20150209_0

25 http://www.ceylontoday.lk/51-83376-news-detail-jaffna-diocese-calls-for-the-release-of-tamil-political-prisoners.html

கொள்கைகளுக்கான நிலையத்தின் (மா.கொ.நி) சமீபத்தைய விமர்சனம்[26] ஆணைக்குழுவின் நம்பகத்தன்மையை பாழ்படுத்தும் முக்கிய விடயங்கள் மற்றும் போக்குகள் பற்றி சுட்டிக் காட்டுகின்றது. அது, செயன்முறையிலான குறைபாடுகள் ஒரு யுத்தத்துக்குப் பிந்திய சூழ்நிலையிலான குறைகளைக் கவனம் செலுத்தவதற்கு உள்நாட்டுச் செயன்முறையின் இயலாமையை உறுதிப்படுத்துவதுடன் அவை, சர்வதேச புலன்விசாரணைக்கான அழைப்புகளை வலுப்படுத்துவதாகவும், மேலும் தெரிவிக்கிறது.

### 4. *இராணுவமயப்படுத்தல் –*

வடக்கிலிருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தில், "துருப்புக்களின் பலம் குறைக்கப்பட மாட்டாது என்றும் தற்போதுள்ள இராணுவ தளங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது தொடர்ந்தும் செயற்படும்", என அமைச்சர் குறிப்பிட்டார்.[27] பாதுகாப்பு படைகளின் பிரசன்னம் காரணமாக வடக்கிலுள்ள மக்கள் நிம்மதியாக வாழுகின்றனர், அதனால் நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் பாதுகாப்பு படைகளை மீளப்பெறுவது புத்திசாலித்தனமானதல்ல என, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வெளிப்படையாகவே அமைச்சருக்கு தெரிவித்தார்.[28] தனது தேர்தல் பரப்புரைகளின் போது அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் திரு. சிறிசேன கூட வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்பட மாட்டாது என தெளிவாகக் கூறியிருந்தார். வடக்கு, கிழக்கில் மக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் இராணுவம் ஓர் அதிகரித்த கட்டுப்பாட்டை தொடர்ந்து அப்பியாசிப்பதினால் சிவிலியன் விவகாரங்களில் இராணுவம் வகிக்கும் முன்னணிப் பாத்திரம் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கு ஓர் அச்சுறுத்தலாக உள்ளது.

### 5. *இன முரண்பாடுகளுக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண்பதன் மீதான தெளிவற்ற நிலை -*

இன முரண்பாடுகளுக்கு அரசியல் தீர்வு எதுவும் பிரேரிக்கப்படவில்லை என்பதோடு சிறிசேன அரசாங்கமும் இனப் பிரச்சினைக்கான ஏதேனும் அரசியல் தீர்வு பற்றி தொடர்ந்தும் உறுதியற்ற நிலையிலேயே உள்ளது. தேர்தல் விஞ்ஞாபனம் கூட சாத்தியமான தீர்வுகள் பற்றி அதனளவில் தெளிவற்ற நிலையிலுள்ளதுடன் அரசாங்கமும் அவ்வாறே தொடர்ந்துமுள்ளது. திரு.சிறிசேன நாட்டை இரண்டாகப் பிரிக்கப் போகிறார் எனத் தெரிவிப்பதன் மூலம் ராஜபக்ச தரப்பு பாதுகாப்பதற்கு முயலும் சிங்களப் பெரும்பான்மை வாக்குகளை வெல்வதற்கான தேவையின் நிமித்தம் இது என விமர்சகர்கள் வாதிடுகின்றர். ஏப்பிரல் 2015 இல் அறிவிக்கப்படவுள்ள பொதுத் தேர்தலுடன் தற்போதைய நிர்வாகத்தின் தலைகளுக்கு மேல் சிங்களப் பெரும்பான்மை வாக்குகள் மீண்டுமொரு தடவை ஊசலாடுகிறது.

### 6. *க.பா.ந.ஆ இன் அமுல்படுத்தல் -*

யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் ஒரு புலன்விசாரணையை ஆரம்பிப்பதற்கும் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு (அதைப் பொறுத்த வரையில், பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளால் ஒரு குறையுள்ள பொறிமுறை என கருதப்பட்டது) அமைய நடவடிக்கை எடுப்பதற்கும் திரு.சிறிசேன உறுதியளித்த போதிலும் க.ப.ந.ஆ இன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு எந்தவொரு காத்திரமான நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை.

### 7. உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் -

தற்போதைய அரசாங்கம் உள்ளக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி மற்றும் குடியேற்றப்பட்ட இடங்களில்[29] உட்கட்டுமான வசதிகளை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உறுதியளித்தது, ஆனாலும் உண்மையில் இந்தப் பிரச்சினை மீது கவனம் கொள்வதற்கு எந்தவொரு உறுதியான நடவடிக்கைகளையும் அது எடுக்கவில்லை.

இன முரண்பாடுகளுக்கான ஓர் அரசியல் தீர்வு மீது செயலாற்றும் வேளையில் இந்த முக்கியமான பிரச்சினைகளில் கவனம் கொள்வது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புதிய அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு நேர்மறையான ஒத்துழைப்பை சாதகமான வகையில் ஆரம்பிப்பதற்கு இட்டுச் செல்லலாம். இது தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும். அதனால், ஒரு மாற்றத்தையும் மற்றும் பல தசாப்தங்களாக இலங்கையர்களுக்கு மறுக்கப்பட்ட ஒரு நிலையான சமாதானத்தையும் கொண்டு வருவதற்கு உண்மையான பற்றுறுதியைக் அவர்கள் கொண்டிருந்தால், புதிய ஜனாதிபதியும் மற்றும் பிரதம மந்திரியும் தமிழர்களின் அபிலாசைகளை கவனத்திலெடுத்து அதற்கமைய செயற்படுதல் வேண்டும்.

ஐங்கரன் குகதாசன்[30]

## கொழும்பு துறைமுக செயல்திட்டம் : சுற்றாடல் ரீதியாக சவாலுக்குட்படுத்தப்பட்டது

1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான, கொழும்புத் துறைமுக செயல்திட்டம், எப்போதும் ஒரு அரசியல் கதையாக ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் பூகோள அரசியல் தொடர்புடன் பிணைந்ததாக உள்ளது. அண்மையில், திட்டத்தை எதிர்ப்பவர்கள் செயல்திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு (சுதமஈ) மீதாக தங்களது எதிர்ப்புகளை மீள ஆரம்பித்தனர். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் அரசியல்மயப்படுத்தல் துரதிர்ஷ்டவசமாக, அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் ரீதியான பேண்தகுநிலை

[26] காணாமற்போன நபர்கள், போக்குகள், நடைமுறைகள் மற்றும் தாக்கங்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் புலன்விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒரு விமர்சனம், டிசம்பர் 2014.

[27] http://www.dailymirror.lk/63055/no-troops-reduction-in-north-minister-ruwan#sthash.FVmMuMJE.dpuf

[28] http://www.lotuscomm.net/news/news-updates/1135-sri-lanka-buddhist-prelate-asks-not-to-withdraw-military-from-any-part-of-the-country

[29] http://www.dailynews.lk/?q=local/resettlement-remaining-idps-be-expedited-minister

[30] சட்டத்தரணி

என்பவற்றுக்கிடையில் ஒரு தவறான இரு வகை நிலைப்பாட்டை பதிய வைக்கிறது. அத்தோடு அது சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய பல்வேறுபட்ட தப்பபிப்பிராயங்களையும் எடுத்துக் காட்டுகிறது.



**Image : Dominic Sansoni/ World Bank**

<u>சுற்றாடல் தாக்க மதிப்பீடு எங்களுக்கு ஏன் தேவை</u>

அபிவிருத்தி பற்றிய பாரம்பரிய புரிந்து கொள்ளுதலும் மற்றும் சுற்றாடல் மீதான அதன் தாக்கமும் வருமானம் அதிகரிப்பதினால் சுற்றாடல் தரங்குன்றலுக்கு ஒரு இயந்திரத்தனமான பதிலிறுத்தலையே ஊகிக்கிறது. இந்த உறவின் ஒரு புரிந்து கொள்ளுதல் வளங்களின் ஒதுக்கீடு மூலமானதாகும். உதாரணத்துக்கு, வினைத் திறனின்மை, விரயம் அதிக மாசடைதலுக்கு இட்டுச்செல்லுதல் காரணமாக அபிவிருத்தியின் ஆரம்ப நிலைகளில் சுற்றாடல் தரங்குன்றல் அதிகரிக்கின்றது என, போல் குஸ்நெட்ஸ் வாதிடுகிறார். சமூகவியல் ரீதியான புரிந்து கொள்ளுதலும் கூட கவனத்திற்குரியதாகும். உதாரணத்துக்கு, ரொபேர்ட் நாஷ், அபிவிருத்தியடையும் சமூகங்கள் சுற்றாடலை சுரண்டலுக்கான ஒரு வளப் பயன்பாடாக நோக்குகின்றனர்' அதனால் அது அபிவிருத்தியின் ஆரம்ப நிலைகளில் கடுமையான சுற்றாடல் தரங்குன்றலுக்கு இட்டுச் செல்கின்றது எனவும் வாதிடுகிறார். இரண்டு சந்தர்ப்பங்களிலும், கைத்தொழில் கூடுதல் வினைத்திறன் கொண்டதாக வருதல் அல்லது சுற்றாடல் குறித்த உளப்பாங்கு நேர்மறையான வகையில மாற்றமடைதல் என்பதால் அதிகரிக்கும் அபிவிருத்தி குறைவடையும் மாசடைதலுக்கு இட்டுச் செல்கிறது.

எவ்வாறாயினும், சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கு எங்களது அணுகுமுறையை வழிகாட்டுவதற்கு, பாரம்பரிய புரிந்து கொள்ளுதல் இனியும் போதுமானதல்ல. எங்களது இயற்கையான வாழிடம் இடரேதுநிலை கொண்டது மற்றும் வரையறைக்கு உட்பட்டது என சமூகம் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளது. கட்டுப்படுத்தப்பட முடியாத வளர்ச்சி இனியும் இலங்கை போன்ற நாடுகளுக்கான ஒரு தெரிவு அல்ல. இந்த "தர நியமத்திலான" அபிவிருத்தி மாதிரிக்கு மாற்றீடு பேண்தகு நிலையிலான அபிவிருத்தியாகும், இங்கே சமூகம் தங்களது வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் வரை, ஆனால் எதிர்காலச் சந்ததியினர் தங்களது சொந்த வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை மறுக்காத வரைக்கும் மட்டுமே இயற்கை வளங்களை உபயோகிக்கிறது. இந்தப் பின்னணியில், சுற்றாடல் தாக்க மதிப்பீடு முக்கியமான ஒரு பாத்திரத்தை வகிக்கிறது.

<u>சுற்றாடல் தாக்க மதிப்பீடு என்ன செய்கிறது</u>

சுற்றாடல் தாக்க மதிப்பீடு சுற்றாடல் உடன்படிக்கைகள் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் ஒரு முக்கிய அம்சமாக வந்துள்ளதுடன் சர்வதேச வழக்காற்று உடன்படிக்கைகளுக்குள்ளும் ஊடுருவியுள்ளது. சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி மீதான ரியோ பிரகடனத்தின் 17 ஆவது கோட்பாடு, எஸ்பூ (Espoo) உடன்படிக்கை மற்றும் எல்லைகளுக்கிடையிலான தீங்கு (transboundary harm) மீதான ஐ.எல்.சி வரைபு உறுப்புரைகளின் உறுப்புரை 7, சுகாதாரம் மற்றும் பீடைகள் மற்றும் நுண்ணங்கிகள் தொடர்பான சுகாதார உடன்படிக்கையின் உறுப்புரை 5, என்பன ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிக் காட்டும் ஒரு சில உதாரணங்களாகும்.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் நோக்கத்தை விளங்கிக் கொள்வதற்கான ஒரு வழி, அது, சிகரெட் பெட்டிகள் மீதுள்ள ஒரு எச்சரிக்கை போன்றதாகும். எச்சரிக்கையிலுள்ள தகவல்கள் அவர்களது கொள்வனவின் பின்விளைவை பாவனையாளர்களுக்கு வெறுமனே அறிவிக்கிறது, ஆனால் கொள்வனவை மேற்கொள்வதற்கு பாவனை யாளர்கள் இன்னமும் சுதந்திரமானவர்கள். அதேபோன்று, ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீடு, தீர்மானம் மேற்கொள்ளும் போது ஒரு பிரேரிக்கப்பட்ட நடவடிக்கையை அனுமதிப்பதா மற்றும் எத்தகைய கட்டுப்பாடுகள் அல்லது உடன்பாட்டு நெறிமுறைகள் இடப்படுதல் வேண்டும் என்பது பற்றி தீர்மானம் மேற்கொள்வோர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சாத்தியமான சுற்றாடல் பாதிப்புகள் பற்றி அறிவிக்கிறது.

எவ்வாறாயினும், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள், ஒரு செயல்திட்டம் மேற்கொள்ளபடல் வேண்டுமா அல்லது அது எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கான கருவிகளல்ல. மேலும், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு கருதும் திருப்தி அங்கே சுற்றாடல் தீங்கிற்கு எந்த ஏதுநிலையும் இல்லை என்பதைக் காட்ட வேண்டியதில்லை என்பதும் தெளிவு. பதிலுக்கு, செயல்திட்டத்தின் சாத்தியமான தாக்கம் மற்றும் முறையான செயன்முறைகளைப் பின்பற்றுதல் என்பவை பற்றி அவசியமான தகவல்களை அது வழங்குதல் வேண்டும். ஒரு முறையான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை எது உண்மையில் கட்டமைக்கிறது என்பதன் மீது சர்வதேச உடன்படிக்கைகள் கூட தெளிவில்லாதவையாக உள்ளன என்பது, ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

<u>இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு</u>

சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான இலங்கையின் வழிகாட்டல்கள் அநேகம் 1988 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்ட இல.56 இல் காணப்படுகின்றதுடன், அது "சுற்றாடல் மீது கணிசமான தாக்கங்களைக்" கொண்டிருக்கக்கூடிய பாரியளவிலான அபிவிருத்தி செயல்திட்டங்களுக்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டைத் தேவைப்படுத்துகிறது. தீவிரத்தின் அளவை நடவடிக்கையே தீர்மானிக்கிறது. முக்கியமற்ற செயல்திட்டங்களுக்கு ஆரம்பச் சுற்றாடல் பரிசோதனை (IEE) மட்டுமே தேவை, அது குறுகியதும் மற்றும் எளிமையானதுமான ஒரு செயன்முறையாகும். முக்கியமான செயல்திட்டங்கள் கூடுதல் விரிவான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டைத் தேவைப்படுத்தும். மேலும், ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீடு, மக்கள்

கருத்துகளுக்காக 30 வேலை நாட்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும் (ஆரம்பச் சுற்றாடல் பரிசோதனை விலக்களிக்கப்பட்டுள்ளது).

இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் அரசியல் மயப்படுத்தல் அதன் பெறுமதிக்கு ஒரு பெரும் தப்பபிப்பிராயத்துக்கு இட்டுச் செல்கிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு தீர்மானம் மேற்கொள்வோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உதவுவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு தகவல் மூலம் என்பதற்குப் பதிலாக, அது இப்பொழுது ஒரு செயல்திட்டம் அனுமதிக்கப்படுவதைத் தீர்மானிக்கும் ஒரு ஆட்சி அதிகார பரிசீலிப்புச் சாதனமாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை அதனளவிலேயே பாழாக்குகின்றதுடன் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளிலிருந்து பொதுமக்களை நீக்குகிறது.

<u>சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை எவ்வாறு சிறப்பாகச் செயலாற்றச் செய்வது</u>

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேம்படுத்துவதற்கு, ஒரு சாத்தியமான, ஆனாலும் முழுமையானதல்லாத முறை பொதுக் கலந்துரையாடல்கள் மூலமானதாகும். வேறெங்காவது ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறைகள் இலங்கைக்கு வழிகாட்ட உதவ முடியும். செயல்திட்டத்திற்கு ஆதரவான, அதிகாரங் கொண்ட அரசாங்க அதிகாரசபை அல்லது ஏனைய அமைப்பு முறை விரிவான பொதுக் கலந்துரையாடல்களை, விசேடமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுப்பதற்கும் மற்றும் நிதியளிப்பதற்குமான பொறுப்புகளை எடுப்பது, சிறந்ததாகும்.

பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புரை செய்வதற்கு பல வழிகள் உள்ளன. சுற்றாடல் தாக்க மதிப்பீடு மீதான ஒரு பொதுமக்கள் பதிலிறுப்புக்கு வேண்டி, வானொலி, தொலைபேசி மற்றும் செய்தித்தாள்கள் வாயிலாக அதிகாரசபைகள் பொதுமக்களுக்கு இலகுவாக அறிவிப்பதற்கு முடியும். ஏனைய கூடுதல் விரிவான முறைகள் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மீது பொதுமக்கள் விசாரணைகள் அல்லது கூட்டங்கள் அல்லது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைக்கான இடத்திலும் மற்றும் சுற்றியுள்ள மக்களுடன் ஒரு தொடர்பு மையத்தை ஸ்தாபித்தல் என்பவற்றை உள்ளடக்கலாம். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை பிரசுரிப்பதற்கு மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் வலைப்பக்கங்களை ஒதுக்கி பின்னூட்டல்களை கேட்டுக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும். எந்த முறையாக இருந்தாலும், இந்த சந்திப்புகளின் உள்ளடக்கம் அவதானத்தை தேவைப்படுத்துகிறது.

ஒரு பொதுமக்கள் கலந்தாலோசனை, செயல்திட்டம் பற்றியும் மற்றும் சுற்றாடல் மீது செயல்திட்டத்தின் தாக்கங்கள் பற்றியும் விபரித்தல் வேண்டும். இவ்வாறு, செயல்திட்டம் மற்றும் அதன் நோக்கம் என்பவற்றின் ஒரு அடிப்படைப் புரிந்து கொள்ளுதலிற்கு அப்பால், சாத்தியமான சுற்றாடல் தாக்கங்கள், பாதிப்புகளைக் குறைப்பதற்கு சாத்தியமான முறைகள், செயல்திட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலுக்கு ஏற்படுத்திய பொறிமுறைகள் மற்றும் அறிவு என்பவற்றுக்கிடையிலான இடைவெளி என்பவற்றையும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு விபரித்தல் வேண்டும். சுற்றாடல் தாக்க மதிப்பீடு மக்களை அறிவூட்டி மற்றும் அறிவித்தல் வேண்டும்' அவர்களை குழப்பத்திலாழ்த்தி மற்றும் பிரிப்பதற்கு பயன்படுத்தப்படல் கூடாது.

சுற்றாடல் தாக்க மதிப்பீடு பேண்தகு அபிவிருத்திக்கு முக்கியமானது, ஆனால் அவை ஏன் மற்றும் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதை புரிந்து கொள்வதும் முக்கியமானதாகும். சுற்றாடல் தாக்க மதிப்பீடு பதட்டமான நன்கொடையாளர்களை சமனப்படுத்துவதற்கான ஆட்சி அதிகாரப் பரிசீலிப்புச் சாதனமாகவோ அல்லது அவை ஒரு அபிவிருத்திச் செயல் திட்டத்திறகான வழியின் இறுதித் தடையாகவோ இருத்தல் கூடாது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு தீர்மானம் மேற்கொள்வோர்களை அறிவித்து மற்றும் அறிவூட்டி, அபிவிருத்தியை மேலும் நிலைபேறானதாக்கும் அறிவார்ந்த தெரிவுகளை மேற்கொள்வதற்கு அவர்களை வலுப்படுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அவர்கள் உண்மையில் அறிவார்ந்த தெரிவுகளை மேற்கொள்கிறார்களா என்பது, எந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் நோக்கெல்லைக்கும் அப்பாற்பட்டது.

நவம் நைல்ஸ்

இலங்கை இளைஞர் காலநிலை நடவடிக்கை வலையமைப்புக்கான (SLYCAN) ஓர் ஆராய்ச்சி இணைப்பாளர் மற்றும் RIC இல் இலண்டன் பல்கலைக் கழக நிகழ்ச்சித் திட்டத்துக்காக உலக சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் அரசியல் எனும் விடயம் மீதான விரிவுரையாற்றுபவர்

CCFD TERRE SOLIDAIRE

***Published with support from CCFD***

*Send your stories, photos and cartoons to lst.escrprogram@gmail.com  Signed articles are the view of the writer*

*Published in Sinhala, Tamil & English and downloadable from*
*http://www.lawandsocietytrust.org/resources.html*